# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி
# எட்டாம் பத்து

## ஏழாம் திருமொழி - வியமுடை
## திருக்கண்ணபுரம் 7

** வியம் உடை விடை இனம் * உடைதர மடமகள் *
குயமிடை தடவரை * அகலம் அது உடையவர் **
நயம் உடை நடை அனம் * இளையவர் நடை பயில் *
கயமிடை கணபுரம் * அடிகள் தம் இடமே 1

இணை மலி மருதினொடு * எருதிற இகல் செய்து *
துணை மலி முலையவள் * மணம் மிகு கலவியுள் **
மணமலி விழவினொடு * அடியவர் அளவிய *
கணம் மலி கணபுரம் * அடிகள் தம் இடமே 2

புயல் உறு வரை மழை * பொழி தர மணி நிரை *
மயல் உற வரை குடை * எடுவிய நெடியவர் **
முயல் துளர் மிளை முயல் துள * வளவிளை வயல் *
கயல் துளு கணபுரம் * அடிகள் தம் இடமே 3

ஏதலர் நகை செய * இளையவர் அளை வெணெய் *
போது செய்து அமரிய * புனிதர் நல்விரை மலர் **
கோதிய மதுகரம் * குலவிய மலர்மகள் *
காதல் செய் கணபுரம் * அடிகள் தம் இடமே 4

தொண்டரும் அமரரும் * முனிவரும் தொழுதெழ *
அண்டமொடு அகல் இடம் * அளந்தவர் அமர் செய்து **
விண்டவர் பட * மதிள் இலங்கை முன் எரி எழ *
கண்டவர் கணபுரம் * அடிகள் தம் இடமே 5

மழுவியல் படை உடை * அவன் இடம் மழை முகில் *
தழுவிய உருவினர் * திருமகள் மருவிய **
கொழுவிய செழுமலர் * முழுசிய பறவை பண் *
எழுவிய கணபுரம் * அடிகள் தம் இடமே 6

பரிதியொடு அணிமதி * பனி வரை திசை நிலம் *
எரி தியொடு எனவின * இயல்வினர் செலவினர் **
சுருதியொடு அருமறை * முறை சொலும் அடியவர் *
கருதிய கணபுரம் * அடிகள் தம் இடமே 7

படி புல்கும் அடி இணை * பலர் தொழ மலர் வைகு *
கொடி புல்கு தடவரை * அகலம் அது உடையவர் **
முடி புல்கு நெடுவயல் * படை செல அடிமலர் *
கடி புல்கு கணபுரம் * அடிகள் தம் இடமே 8

புலமனு மலர் மிசை * மலர்மகள் புணரிய *
நிலமகள் எனவின * மகளிர்கள் இவரொடும் **
வலமனு படை உடை * மணிவணர் நிதி குவை *
கலமனு கணபுரம் * அடிகள் தம் இடமே 9

** மலி புகழ் கணபுரம் உடைய * எம் அடிகளை *
வலி கெழு மதிள் அயல் * வயல் அணி மங்கையர் **
கலியன தமிழ் இவை * விழுமிய இசையினொடு *
ஒலி சொலும் அடியவர் * உறுதுயர் இலரே 10

**அடிவரவு:** வியம் இணை புயல் ஏதலர் தொண்டர் மழு பரிதியொடு படி புலம் மலிபுகழ் வானோர்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---